முன்னிலை: திரு.சதாம்உசேன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.86/2022

அ.சா.1

2026–ம் ஆண்டு ஜுலை 28–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரவேல் | தொழில் | |
| தந்தை பெயர் | கோபால் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 04.00 மணி,

Accused Hari present. Advocate Mr.Veeramani present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பெரியேரிப்பட்டி வகுத்தனூரில் குடியிருந்து செங்கல் சூளை வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் காயமடைந்து இறந்து போன ராஜாத்தி என்பவர் எனது அம்மா. காயமடைந்த கோபால் என்பவர் எனது அப்பா. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனது அப்பாவும், அம்மாவும் காய்கறி வாங்குவதற்காக தாரமங்கலம் மார்க்கெட்டிற்கு எக்ஸ்.எல் ெஹவி டியூட்டி இருசக்கர வாகனத்தில் சென்று காய் வாங்கிக்கொண்டு சங்ககிரி பக்கமிருந்து ஓமலூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது தாரமங்கலம் பேருந்து நிலையம் எதிரே கதிர்வேல் கடை அருகே அவர்களுக்கு பின்னால் வந்த லாரி அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே பழக்கடை வைத்திருக்கும் எனது மாமா மயில்வேல் என்பவர் போன் செய்து தகவல் சொன்னார்.

2. நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தேன். அங்கு எனது அம்மாவிற்கு இரண்டு கால்களின் மீது லாரி சக்கரம் ஏறி நசுங்கிவிட்டது. எனது அப்பாவிற்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் இருவரையும் சேலம் நியூரோ பவுன்டேசன் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். பகல் 10.30 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். சம்பவத்தின்போது எனது அப்பா இருசக்கர வாகனத்தில்

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.28 17:56:45 +0530

வந்தார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக எனது அம்மாவை கோவையில் உள்ள கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம்.

3. பின்பு நான் விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு, கங்கா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது அம்மா சிகிச்சை பலனின்றி சம்பவம் நடந்த அன்று மாலை 04.30 மணிக்கு இறந்துவிட்டார். இவ்வழக்கு விபத்தின்போது எனது அப்பா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் தெரியாது. சம்பவத்தின்போது ஆஜர் எதிரி தான் லாரியை ஓட்டிவந்தார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. இவ்வழக்கு புகாரை யார் எழுதினார் என்றால் எனது மாமா மயில்வேல் என்பவர் நான் சொல்லச்சொல்ல எழுதினார். விபத்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தாரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் என்றால் சரிதான். சங்ககிரி – ஓமலூர், ஜலகண்டாபுரம் – ஓமலூர் மற்றும் ஓமலூர் – ஜலகண்டாபுரம் செல்லும் பேருந்துகள் தாரமங்கலம் பேருந்து நிலையம் வழியாக தான் செல்லும் என்றால் சரி. விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை என்பதால் அந்த இடம் எப்போதும் கூட்டமாக தான் இருக்கும் என்றால் சரிதான். பேருந்து நிலையம் என்பதாலும, கூட்டமாக இருக்கும் என்பதாலும் அந்த இடத்தில் வாகனங்கள் வேகமாக செல்லமுடியாது என்றால் சரியல்ல.

5. எனது அப்பாவிற்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சம்பவத்தின் போது எனது அப்பா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை ஆர்.டி.ஓ அலுவலகத்தில் சோதனைக்காக ஒப்படைத்தேனா என்றால், அதுபற்றி நான் கவனம் செலுத்தவில்லை. எனது அப்பாவிற்கு காயம்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக நான் சொல்லியுள்ள நிலையில், அது சம்மந்தமான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியாக தெரியிவில்லை.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.28 17:56:49 +0530

6. எனது அம்மா இறந்தபின்பு தான் காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால் சரி. நான் சொல்ல சொல்ல எனது மாமா புகாரை எழுதினார் என்று நான் சொல்லியுள்ள நிலையில், அப்புகாரில் எனது அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சாட்சி பட்டியலில் உள்ள சாமிநாதன், பழனிசாமி, கார்த்திகேயன், வெள்ளியங்கிரி ஆகியோர் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் என்னுடன் வந்து காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான்.

7. எனது புகாரில் வழக்கு சம்பவத்தின் போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டியதாக நான் கேள்விபட்டேன் என்று சொல்லியுள்ள நிலையில் யார் எதிரியை பார்த்தார்கள் என்றால், எனது மாமா மயில்வேல் என்பவர் நேரில் பார்த்து எனக்கு சொன்னார். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. வழக்கு சம்பவ இடத்திற்கும், தாரமங்கலம் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் இருக்கும். நான் சம்பவ இடம் செல்லும்போது போலிசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரி. மேற்படி விபரங்களை சம்பவ இடத்திலேயே நான் போலிசாரிடம் சொல்லிவிட்டு சென்றேன் என்றால் சரி.

8. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரிக்கு எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. போலிசார் என்னை அழைத்த பின்பு தான் நான் புகார் அளித்தேன் என்றால் சரி. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியின் ஓட்டுநர் குறித்த விபரங்கள் எனக்கு போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல எனது மாமா மயில்வேல் சொல்லி தெரியும். எனது அப்பா வாகனத்தை சரிவர இயக்காமல், எதிரி வாகனத்தின் பின்புறம் மோதி விபத்து ஏற்படுத்தி எனது அம்மாவின் இறப்பை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. வழக்கு விபத்து நடந்த இடம் கூட்ட நெரிசல் மிகுந்த இடம் என்பதால், லாரியால் வேகமாக வந்ததிருக்க முடியாது என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ விசாரணையில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியின் பின்டயரில் மட்டும் சேதம் இருப்பதாகவும், வேறு எந்த இடத்திலும் முன்பகுதியில் சேதம் ஏற்படவில்லை

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.28 17:56:52 +0530

என்பதால் எனது தந்தையின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்றாலும் சரியல்ல.

9. வழக்கு விபத்தில் எனது அப்பா கீழே விழுந்துவிட்டதாக நான் தற்போது தான் முதன்முறையாக சொல்கிறேன் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அம்மாவின் இறப்பிற்கு நஷ்டஈடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு விபத்திற்கு நஷ்டஈடு பெற்றுவிட்டேன் என்றாலும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் நான் சொல்வது போல் எந்த விபத்தும் நடக்கவில்லை என்றாலும், எனது அப்பாவின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 04.20 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.28 17:56:56 +0530